பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

கணிதம்

தரம் மூன்று (முதலாம் தவணை)

2022

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.

நாட்டின் COVID – 19 தொற்று இடர்காலம் இன்றைய நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2021,2022ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு முதலாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் முதலாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

தரம் 3 - கணிதம்

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	1. 100 இற்கு மேற்படாத எண்ணிக்கையான ஒரே வகை பொருள்களை/ உருக்களை இரண்டுகளாக, ஐந்துகளாக, பதத்துகளாக எண்ணுவார்.	1.1 100 இற்கு மேற்படாத எண்ணிக்கையான ஒரே வகை பொருள்களை/ உருக்களை இரண்டுகளாக எண்ணுவார். 1.2 100 இற்கு மேற்படாத எண்ணிக்கையான ஒரே வகை பொருள்களை/ உருக்களை ஐந்துகளாக எண்ணுவார். 1.3 100 இற்கு மேற்படாத எண்ணிக்கையான ஒரே வகை பொருள்களை/ உருக்களை பத்துகளாக எண்ணுவார்.	அலகு 01: செயற்பாடு 02 - 04	04 - 06	02 மணி
	2. எண்களை இனங்கண்டு விளக்கத்துடன் பயன்படுத்துவார்.	2.1 100 வரை எந்தவோர் எண்குறியையும் வாசிப்பார். 2.2 100 வரை எந்தவோர் எண்குறியையும் எண் பெயரையும் சரியாக எழுதுவார். 2.3 பத்தினிடம் வரையில் எண்ணொன்றின் ஒவவோர் இலக்கத்தினதும் இடப்பெறுமானத்தைக் காட்டுவார். 2.4	அலகு 02: செயற்பாடு 01 - 05	07 - 11	02 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	3. எண்களைக் கூட்டும் பிரசினங்களைத் தீர்ப்பார்.	3.1 கொண்டு செலல்லின்றி இரு ஈரிலகக் எணக்ளை, எணபெறுமானத்தைக் கவனத்திற் கொணடு கூட்டி அக்கூட்டுத் தொகையைக் கூறுவார். 3.2 ஈரிலக்கங்களுகக் மேறப்டாத இரு எணக்ளை, இடபபெறுமானத்தைக் கவனத்திற்கொணடு கொண்டுசெல்லலின்றிக் கூட்டும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார்.	அலகு 03: செயற்பாடு 01 - 05	12 - 18	05 மணி
	4. மீற்றரை நீளத்தை அளக்கும் நியம அலகாக இனங்கண்டு மீற்றரைப்பயன்படுத்தி நீளத்தை அளப்பார்.	4.1 எதேச்சையான அலகுகளைப் பயன்படுத்தி நீளத்தை அளப்பார். அறிக்கைப்படுத்துவார். 4.2 நீளத்தை அளக்கும் போது நியம அலகுகளைப் பயன்படுத்துதலின் அவசியத்தை விளங்கிக் கொண்டு மீற்றரைப் பயன்படுத்தி நீளத்தை அளப்பார். 4.3 சரியாக மீற்றர் கோலைப் பயன்படுதகி பொருள்களின் நீளத்தை அளந்து அறிக்கைப் படுத்துவார்.	அலகு4: செயற்பாடு 01 - 03	19 - 22	02 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	5. கொண்டுவருதல் இல்லாத சந்தர்ப்பங்கள் உள்ளடங்கிய எளிய கழித்தல் பிரசினங்களைத் தீர்ப்பார்.	5.1 18 இற்கு மேற்படாத எண்ணொன்றில் இருந்து அதிலும் குறைந்த எண்ணொன்றைக் கழித்து விடையைக் கூறுவார்.	அலகு 05: செயற்பாடு 01 - 03	23 - 27	05 மணி
	6. நாள், வாரம், மாதம் ஆகியவற்றிடையே உள்ள தொடர்பை இனங்கண்டு பிரயோாகிப்பார். கடிகாரம் காட்டும் நேரத்தை வாசிப்பார்.	6.1 நாட்களினதும் மாதங்களினதும் பெயர்களைச் சரியாகக் கூறுவார். 6.2 நாள், வாரம், மாதம் ஆகியவற்றிடையே உள்ள தொடர்பை இனங்கண்டு கூறுவார். 6.3 மணித்தியாலத்திற்கு மணித்தியாலம் கடிகாரம் காட்டும் நேரத்தை வாசிப்பார்.	அலகு 06: செயற்பாடு 01 - 04	28 - 32	02 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	7. 10 வரையில் எண்களை இரண்டினால் பெருக்குவார்.	7.1 இரண்டின் பெருக்கல் வாய்ப்பாட்டைக் கட்டியெழுப்பி வாசிப்பார். 7.2 இரண்டின் பெருக்கல் வாய்ப்பாட்டை ஞாபகத்தில் இருந்து கூறுவார். 7.3 10 வரை எண்ணொன்றை இரண்டால் பெருக்கி பெருகக்கத்தைக் கூறுவார்.	அலகு 07: செயற்பாடு 01 - 03	31 - 33	05 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	8. திண்மங்களினதும் கேத்திர கணிதத் தளவடிவங்களினதும் இயற்பண்புகளையும் இயல்பையும் இனங்கண்டு செயற்பாடுகளில் ஈடுபடுவர்.	8.1 சதுரம், செவ்வகம், வட்டம், முக்கோணி ஆகிய கேத்திர கணித வடிவங்களைப் பெயர் குறிப்பார். 8.2 இரு பரிமாண கேத்திர கணித வடிவங்களை வரைவார். 8.3 கேத்திரகணித வடிவங்களின் இயற்பண்புகளைக் கூறுவார். 8.4 சதுரமுகி, கனவுரு, உருளை, கோளம், நான்முகி ஆகிய கேத்திர கணித திண்மங்களின் இயற்பண்புகளைக் கூறுவார்.	அலகு 08: செயற்பாடு 01 - 05	37 - 41	05 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	9. ஏதேனும் பொருள் தொகையை சமனாகப் பிரிப்பார்.	9.1 பொருள்களைக் கொண்டு மீதியின்றி 20 இலும் குறைந்த எண்ணொன்றைச் சமனாக இருவரிடையே பிரிப்பார். 9.2 மீதியுடனான சந்தர்ப்பமொன்றில் பொருள்களைக் கொண்டு 20 இலும் குறைந்த எண்ணிக்கையான பொருள்களை சமமாகப் பிரிப்பார். மீதியைக் கூறுவார். 9.3 20 இலும் குறைந்த எண்ணிக்கையான பொருள்களை சமமாகப் பிரிப்பதற்குப் பொருதத் மான எளிய பிரசினங்களைத் தீர்ப்பார்.	அலகு 09: செயற்பாடு 01 - 05	42 - 45	05 மணி

அத்தியவசிய கற்றர் தேர்ச்சிகள்	தேர்ச்சிகள்	கற்றற்பேறுகள்	செயற்பாடு	ஆசிரிய வ.கா. பக்க இல	காலம்
	10. ஒழுங்கான பொருள்களையும் வடிவங்களையும் கொணடு பாதியையும் (அரை) காலையும் இனங்கண்டு பெயர்குறிப்பார்.	10.1 ஒழுங்கான பொருள்களும் வடிவங்களும் மூலம் பாதியை இனங்கண்டு காட்டுவார். 10.2 இரு பாதிகளைச் சேர்க்கும் போது மீண்டும் முழுமையான ஒன்றாகும் என்பதை ஏற்றுக் கொள்வார். 10.3 ஒழுங்கான பொருள்களும் வடிவங்களும் மூலம் காலை இனங்கண்டு காட்டுவார்.	அலகு 10: செயற்பாடு 01 - 02	46 - 48	02 மணி
				மெத்த நேரம்	35 மணி